**சிரியாவின் ரசாயன ஆயுதங்களை அழிக்க இந்தியா ஆதரவு அளிக்கத் தயார்**

டிசம்பர் 03, 2013-12-03

சிரியாவில் ரசாயன ஆயுதங்கள் மற்றும் அது தொடர்புடைய வசதிகளை அழிப்பதற்கு பயன்படும் வகையில் ஹேகில் அமைக்கப்பட்டுள்ள ராசயன ஆயுதங்கள் விலக்கு அமைப்பு (OPCW)என்ற அறக்கட்டளை நிதிக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் நிதி வழங்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்தியா ரசாயன ஆயுதங்கள் விலக்கு அமைப்புக்கு இந்த ஆயுதங்கள் அழிப்பு சரிபார்ப்புப் பணியில் இந்தியா தனது நிபுணத்துவ சேவைகளையும் வழங்குவதாக அறிவிக்கும். மேலும், சிரியாவில் உள்ள ரசாயன ஆயுதங்களை அழிக்கும் பணியில் ஈடுபடுபடும் ஐ.நா/ ரசாயன ஆயுதங்கள் விலக்கு அமைப்பினருக்கு பயிற்சி அளிக்கவும் முன்வர திட்டமிட்டுள்ளது.

இந்தியா ரசாயன ஆயுதங்கள் மாநாட்டின் பூர்வ உறுப்பினர் நாடாகும். ரசாயன ஆயுதங்களைக் கொண்டிருந்த இந்தியா இந்த மாநாட்டின் முடிவுப்படி இந்த ரசாயன ஆயுதங்களை அழிக்கும் பணியை நிறைவேற்றியது.

சிரியாவின் ரசாயன ஆயுதங்களை பாதுகாத்து அழிப்பதில் காலவரைக்குட்பட்ட பணிகளில் ஏற்படும் முன்னேற்றங்களை இந்தியா வரவேற்கிறது. ரசாயன ஆயுதங்கள் மாநாட்டில் சிரியாவை சேர்ப்பதற்கும் வரவேற்பளிக்கிறது. ரசாயன ஆயுதங்கள் விலக்கு அமைப்பிற்கு உதவ இந்தியா முன் வருவது, உலகெங்கும் ரசாயன ஆயுதங்களை முற்றிலுமாக அழிக்கவும் ஒழிக்கவும் ஆதரவு அளிப்பதை உறுதியாக விளக்கும் வகையில் அமைந்துள்ளது.